# 22-01-2023 செய்தி

## சென்னையில் ஆமைகள் பாதுகாப்பு, மறுவாழ்வு மையம்

**ஆலிவ் ரிட்லி**

- நீளமான கடற்கரைப் பகுதியைக் கொண்ட தமிழ்நாட்டில் 5 வகையான ஆமை இனங்கள் உயிர் வாழ்கின்றன.
- இவற்றில் ஆலிவ் ரிட்லி வகை ஆமைகளை குறிப்பிடத்தக்கவை. இந்த வகை ஆமைகளைக் காக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.
- குறிப்பாக கடந்த 1974 ஆம் ஆண்டுகளிலேயே ஆமைகளுக்கான குஞ்சு பொறிப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**இலக்கு**

- இந்த மையமானது ஆமைகள் பாதுகாப்பு மட்டுமின்றி ஆராய்ச்சி, தரவுகளைச் சேகரிப்பது, ஆமைகள் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்றவற்றையும் இலக்குகளாகக் கொண்டிருக்கும்.

**மையத்தின் செயல்பாடுகள்**

- காயம் ஏற்படக்கூடிய ஆமைகளை உடனடியாக மீட்டு அவற்றுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படும்.
- நல்ல முறையில் குணமடைந்த ஆமைகள் திரும்பவும் கடலுக்குள் விடப்படும்.
- ஆமைகளை சட்ட விரோதமாகக் கடத்துவதுடன், அதனை வணிக நோக்கில் விற்பவர்கள் குறித்த விவரங்களைப் பெற சிறப்பான புலனாய்வு அமைப்பு ஏற்படுத்தப்படும்.
- தமிழ்நாட்டில் கடலோரப் பகுதிகளில் ஆமைகள் முட்டையிடும் இடங்கள், அவை நகரக்கூடிய பாரம்பரிய பகுதிகள் ஆகியன கண்டறியப்படும்.
- கடலில் இருக்கக்கூடிய ஆமைகளின் பெருக்கம் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.
- இந்தக் கண்காணிப்புப் பணியில் கடலில் மீன்பிடித்தொழில் செய்யும் மீனவர்களும் ஈடுபடுத்தப்படுவர். இத்துடன், ஆமைகளைக் காப்பதன் அவசியம் குறித்து உள்ளூர் மக்களிடம் எடுத்துரைக்கப்படும்.
- தமிழ்நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் ஆமைகள் குறித்து கிடைக்கக்கூடிய தகவல்கள் அனைத்தும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான ஆமைகள் பாதுகாப்பு அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.
- கடல் பகுதியில் ஆமைகள் முட்டையிட்டு குஞ்சு பொறிக்கவும், அவை கடல் பகுதிகளுக்கு தாராளமாகச் சென்று வரவும் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும்.

## புதையும் நகரம் புகட்டும் பாடம்

**எல்லை தேவபூமி**

- இமயமலையின் இயற்கை எழில் சூழ்ந்த உத்தரகாண்டில் ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதர்நாத், ஹரித்துவார், ஹேமகுந்த் சாகிப் போன்ற ஏராளமான புனிதத் தலங்கள் உள்ளதால் இதை 'தேவபூமி' என்று அழைக்கிறார்கள்.
- நைனிடால், முசோரி உள்ளிட்ட பல சுற்றுலா தலங்களும் உள்ளன.
- இதனால் இங்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பக்தர்களும் சுற்றுலா பயணிகளும் வருகிறார்கள்.

**எல்லை**

- இந்த மாநிலத்தின் வடக்கே சீனாவின் ஆக்கிரமிப்பில் உள்ள திபெத்தும், தெற்கே உத்தரபிரதேசமும், கிழக்கே நேபாளமும், மேற்கிலும், வடமேற்கிலும் இமயமலையும் எல்லைகளாக அமைந்துள்ளன.
- இங்குள்ள சமோலி மாவட்டத்தில் ரிஷிகேஷ்–பத்ரிநாத் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அழகிய சுற்றுலா நகரமான ஜோஷிமத் (ஜோஷிமடம்) கடல் மட்டத்தில் இருந்து 6,150 அடி உயரத்தில் இருக்கிறது.

**சிறப்புகள்**

- ஆதிசங்கரர் நிறுவிய 4 பீடங்களில் ஒன்று ஜோஷிமத்தில் உள்ளது. (கர்நாடக மாநிலம் சிருங்கேரியில் உள்ள சாரதா பீடம், குஜராத்தில் உள்ள துவாரகா பீடம், ஒடிசாவில் உள்ள கோவர்த்தன பீடம் ஆகியவை மற்ற 3 பீடங்கள் ஆகும்.
- அலக்னந்தா ஆறு இந்த நகரின் வழியாக செல்கிறது.

**இமயமலை**



- இந்தியாவின் வடக்கே, காஷ்மீரில் இருந்து கிழக்கே அருணாசலபிரதேசம் வரை மிகப்பெரிய அரண்போல் இமயமலை அமைந்துள்ளது. இது ஒரே மலையாக இல்லாமல் 4 பெரிய மடிப்புகளாக உள்ளது.
- வடக்கு ஓரத்தில் உள்ள மடிப்பு 'டிரான்ஸ் இமயமலை' எனவும்
- அடுத்ததாக உள்ள மடிப்பு 'பெரிய இமயமலை' (ஹிம்மாத்ரி) எனவும்
- அதற்கு அடுத்ததாக உள்ள மடிப்பு 'மத்திய இமயமலை' (இமாச்சலம்) எனவும்
- அதற்கு தெற்கே கடைசியாக அமைந்துள்ள மடிப்பு 'கீழ் இமயமலை' (சிவாலிக்) எனவும் அழைக்கப்படுகிறது.

**மிஸ்ரா ஆணையம்**

- உத்தரகாண்ட் மாநிலத்தில் எப்போது வேண்டுமானாலும் பூகம்பம் மற்றும் நிலச்சரிவு ஆபத்து இருக்கிறது. இதனால் மலைப்பகுதியில் உள்ள நகரங்களில் கட்டுமானப் பணிகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசால் அமைக்கப்பட்ட மிஸ்ரா ஆணையம் 1976-ம் ஆண்டில் தாக்கல் செய்த தனது அறிக்கையில் யோசனை தெரிவித்து இருந்தது.
- இந்த நகரத்தின் வழியாகத்தான் ரிஷிகேஷ், பத்ரிநாத், ஹேமகுந்த் சாகிப் போன்ற புனித தலங்களுக்கு செல்ல முடியும்.
- இதனால் இங்கு எப்போதும் பல்வேறு மாநிலங்களிலும் இருந்து வரும் பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.
- பனிச்சறுக்கு போட்டிக்கான சர்வதேச மையமாகவும் இந்த பகுதி விளங்குகிறது.
- இமயமலையில் ஏறுவதற்கான மலையேற்ற பாதையும் இங்குதான் தொடங்குகிறது.
- மேலும் சீன எல்லையையொட்டி அமைந்திருப்பதால் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் விளங்குகிறது.

**காரணம்**

- தேசிய நெடுஞ்சாலைகளை விரிவாக்கம்செய்வது
- இதற்கு கனரக எந்திரங்களை பயன்படுத்துவது
- தீப்பெட்டிகளை ஒன்றோடு ஒன்று ஒட்டி வைத்தாற்போன்று விதிமுறைகளை மீறி கட்டிடங்களை கட்டுவது
- அலக்நந்தா, பிண்டார் நதிகளால் ஏற்படும் நிலஅரிப்பு
- வெள்ளத்தை முறையாக வெளியேற்றாதது
- பல ஆண்டுகளுக்கு முன் பூகம்பத்தால் ஏற்பட்ட நிலச்சரிவால் உருவானதுதான் ஜோஷிமத் பகுதி என்றும், இதனால் அதிகமான எடையை தாங்கும் திறன் இந்த பகுதிக்கு கிடையாது என்றும் புவியியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். இது இயற்கை. இதை மாற்றி அமைக்க முடியாது.
- தங்கும் விடுதிகளில் இருந்து கழிவுநீர் வெளியேறுவதற்கு சரியான வசதிகளும் கிடையாது. இதனால் அந்த தண்ணீரில் பெரும் பகுதி பூமிக்குள்ளேயே இறங்கியது.
- மலைப்பகுதி என்பதால் ஜோஷிமத் நகரில் அலக்நந்தா ஆற்றின் அகலம் வெறும் 8 முதல் 12 மீட்டர்தான்.
- ஆற்று நீரிலும், சிற்றோடைகள் வழியாக செல்லும் நீரிலும் கணிசமாக அளவு பூமிக்குள் கசிந்து கொண்டே இருக்கும்.
- கடினமற்ற தரைப்பகுதிக்குள் தொடர்ந்து தண்ணீர் இறங்கியதன் காரணமாக அங்குள்ள மண் நிலைத்தன்மையை இழந்து கீழ்ப்பகுதியை நோக்கி சென்று இருக்கிறது.

**நீர்மின் திட்டம்**

- ஜோஷிமத் அருகே அலக்நந்தா ஆற்றின் குறுக்கே தேசிய அனல்மின் கழகத்தின் சார்பில் நிறைவேற்றப்படும் தபோவன் விஷ்ணுகாட் நீர்மின் திட்டத்தையும் மக்கள் குறை கூறுகிறார்கள்.
- மிகப்பெரிய இந்த திட்டத்துக்காக சுரங்கம் தோண்டப்படுவதாலும், இதற்கு கனரக வாகனங்களும், எந்திரங்களும் பயன்படுத்தப்படுவதாலும் பெரிய அளவில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.
- ஹேலங்க்-மார்வாரி புறநகர் சாலை பணியின்போதும் பாதிப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

## சீன எல்லையில் பிரம்மாண்ட போர் பயிற்சி

- 2017-ல் சீன எல்லையான டோக்லாம் பகுதியில் சாலை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டது. இதை இந்திய வீரர்கள் தடுத்தபோது, இருதரப்பு ராணுவத்தினர் இடையே மோதல் ஏற்பட்டது.
- உயர்நிலை அதிகாரிகள் பேச்சு வார்த்தைக்குப் பின்னர் இருதரப்பு ராணுவத்தினர் தங்கள் படைகளை டோக்லாம் பகுதியிலிருந்து விலக்கிக் கொண்டனர்.



- 2020-ல் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில், இந்தியா சார்பில் சாலை அமைக்கப்பட்டதற்கு சீன ராணுவம் எதிர்ப்புத் தெரிவித்தது.
- அப்போது நடந்த மோதலில், இரு தரப்பிலும் உயிரிழப்பு சம்பவங்கள் ஏற்பட்டன.
- அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் பகுதியில் இருதரப்பு ராணுவத்தினரிடையே மோதல் ஏறப்ட்டது. இதில் சிலருக்கு காயங்கள் ஏற்பட்டன.

# 22-01-2023 NEWS

## Olive Ridley

### Turtle Conservation and Rehabilitation Center in Chennai

- Five species of turtles survive in Tamil Nadu, which has a long coastline
- Notable among these are olive ridley turtles
- The government is taking various measures to protect this type of turtle
- Especially in the past 1974, turtle hatcheries were established

### Target

- The center aims to not only protect turtles but also research, collect data and raise awareness about turtle farming.

### Functions of the Centre

- Injured turtles are immediately rescued and given appropriate treatment
- Successfully recovered turtles are released back into the sea
- A special investigative system will be set up to get information about the illegal trafficking of turtles and those selling them for commercial purposes
- In coastal areas of Tamil Nadu, turtle nesting sites and traditional migration areas can be found
- The population of sea turtles will be monitored regularly
- Fishermen engaged in sea fishing will also be involved in this monitoring work
- The need to protect the turtles will also be taken to the local people
- All available information on turtles in the coastal areas of Tamil Nadu will be shared with national and international turtle conservation organizations.
- All necessary arrangements will be made for the sea turtles to lay their eggs and give birth to their hatchlings and visit the sea areas freely

SURESH'

## Burial City : A lesson to be learned

### Deva Bhumi

- Uttarakhand, surrounded by the natural beauty of the Himalayas, is known as Devabhoomi because of its many holy places like Rishikesh, Badrinath, Kedarnath, Haridwar & Hemkund Sahib
- There are also many tourist destinations including Nainital, Mussoorie
- Due to this, crores of devotees and tourists come here every year

### Border

- The state is bordered by China-occupied Tibet to the north, Uttar Pradesh to the south, Nepal to the east, and the Himalayas to the west and northwest.
- Located on the Rishikesh-Badrinath National Highway here in Chamoli District, Joshimath is a picturesque tourist town at an altitude of 6150 feet above sea level.



### Features

- Alaknanda river passes through this city
- Joshimath is one of the four Peeths established by Adi Shankara
- Anothe 3 are,
- Sarada Peeth in Sirungeri, Karnataka

- Dwaraka Peeth in Gujarat
- Govardana Peeth in Puri, Odissa

### Himalayas

- The Himalayan mountain ranges from Kashmir in the north of India to Arunachal Pradesh in the east
- It is not a single hill but four large folds
- The fold on the northern margin is the Trans-Himalayan
- The next fold is the Great Himalayas (Himadri)
- The fold next to it is the Central Himalayas (Himachal)
- The last fold south of it is the Lower Himalayas (Siwalik)

### Misra Commission

- The state of Uttarakhand is always prone to earthquakes and landslides
- The Mishra Commission, set up by the central government in 1976, said in its report that construction work in hilly cities should be controlled.
- It is through this city that one can visit holy places like Rishikesh, Badrinath & Hemkund Sahib
- Due to this, devotees from different states always throng
- The area is also an international center for skiing competitions
- The trekking route to climb the Himalayas also begins here
- It is also a place of military importance due to its proximity to the Chinese border

### Reasons

- Expansion of National Highways
- Use heavy machinery for this
- Construction of buildings against norms like putting fire boxes next to each other
- Erosion in Alaknanda and Pindar rivers
- Improper drainage of floodwaters
- Geologists say that the Joshimath area was formed by a landslide caused by an earthquake many years ago and thus the area does not have the capacity to bear much weight.
- There are no proper facilities for disposal of waste water from hostels
- As a result, most of the water went down into the earth
- As it is a hilly area, the width of Alaknanda river in Joshimath is only 8 to 12 meters
- A significant amount of water from rivers and streams seeps into the ground
- Due to continuous water seeping into the hard ground, the soil there has lost its stability and is moving towards the lower part

### Hydropower Project

- People are also complaining about the Tapovan Vishnughat hydroelectric project being implemented by the National Electricity Corporation across the Alaknanda river near Joshimath.
- They allege massive environmental damage due to mining and the use of heavy vehicles and machinery for this massive project.
- They also said that there was damage during the helang marwari bypass suburban road work

## A massive war exercise on the Chinese border



- In 2017, China was involved in the construction of a road along the Chinese border in Doklam
- When the Indian soldiers prevented this, there was a clash between the soldiers of both sides
- Both sides' armies withdrew their forces from the Doklam area after high-level talks
- In 2020, the Chinese Army objected to India's construction of a road in the Galwan Valley
- There were casualties on both sides in the conflict
- A clash broke out between two sides of the army in Tawang area of Arunachal Pradesh. Some were injured in this

SURESH'